ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

வேதாகமபுராணாதி நன்னூல்களையும் அவற்றின் அங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சோதிடம் முதலியவைகளையும் நல்லாசிரியனிடம் சென்று அவனருளியவாறு மூதறிஞர் முறை வழுவாது ஓதித்தெளிந்த உண்மைப் பொருளுக்கேற்ப ஞானிகள் செய்யும் வியவகாரமே உலக உபகாரம். மற்ற போலிகள் பேச்சு பிரபஞ்ச வாசனையை வலுப்படுத்தி நரகக்குழியில் வீழ்த்துவதால் அபகாரமே.

“தான் கெட்டதுமின்றிப் பிறரையும் கெடுப்பான்” என்றபடி சிலர் பாபகார்யத்தைத் துணிந்துசெய்ய ஆரம்பித்து நல்வழி நடப்பவர்களையும் பிடித்திழுக்கிறார்கள். இவர்களே பொதுநலத்திற்குழைப்பவர் என்ற பெயரைப் புண்ணியவசத்தால் அடைந்துவிட்டார்கள். பிராணிகளின் பிராந்தியை என்னவென்றுரைப்போம். இவர்களெல்லாம் பொதுநலத்துக்குழைப்பவர்களாம். உலகத்தைக் கெடுக்கத்தலையெடுத்தவன் எப்படி இருப்பான்.

கோரமான கானகத்தின் நடுவே நிற்குமொருவனைக்கண்டு “அடா மூடா! யாரடா நீ!” என்று ஒரு பெரியவர் கேட்க, “யான் துஷ்டசிகாமணி” என்று பதிலளித்தான். “கோரமாகிய காட்டில் எதற்காக நிற்கின்றாய்” என்று மீண்டும் கேழ்க்க, “சிங்கம், புலி, கரடி முதலிய துஷ்டஜந்துக்கள் என்னைப் பிடுங்கித் தின்னட்டுமென்ற எண்ணத்தாற்றான் நிற்கின்றேன்” என்றான். “பிரியமான பிராணனைவிட என் துணிந்துவிட்டாய்?” என்றதற்கு அவன்— “மனுஷ்யமாம்ஸத்திலுள்ள உருசியை மிருகங்கள் அறியவில்லைபோலும். அறிந்திருப்பின் நாட்டில் வந்து நம்மைத் தின்று இருக்காதா? ஆகையால் முதலில்என்மாம்சத்தைத்தின்றுபார்த்து மனுஷ்ய மாம்ஸ உருசியால் நாட்டில்வந்து எல்லோரையும் தின்றுவிடட்டும் என்றே துணிந்தேன்” என்றானும். இவன் எவ்வளவு உபகாரி பாருங்கள்.

இதுபோல் பாபத்திற்குத் துணிந்த பலர்கள் ஒரே கட்டுப்பாடாய் இருந்து நம்மைப்போலவே எல்லோரையும் நரகத்தில் வீழ்த்திடுவோம் எனத் துணிந்தவர்களே தற்போது பொதுநலத்திலீடுபட்டவர்களாம். நம் பிராசீனர்கள் சுயநலத்தைப் பாராட்டி உலகத்தைக் கெடுத்துவிட்டதாகக் கூச்சலிடுகின்றார்கள். நாகரீகப்பேய் பிடித்தாடும் சிலஸ்திரீகளும் கூட்டமாகக்கூடிக் கண்டதைச் சொல்லுவதோடு இருந்ததுபோய் துண்டு பிரசுரங்கள் வெளியிடவும் முன்வந்துவிட்டார்கள். அந்த வலையிற் சிக்குண்ட சில ஆடவர்களும் அந்த பிரசுரங்களுக்கு பணவுதவி புரிவதும் அதைப் பெருமைப்படுத்திப் பேசுவதும் பாரதபூமியின் முன்னேற்றத்துக்குப் பிரதமகாரணமெனப் பிரஸங்கமேடையில் கூவுகின்றார்கள்.

இவ்வளவையும் கேட்டும் நம பண்டிதமணிகளும் உதாஸீனமாயிருப்பதை யொழிக்க யத்தனிக்கவில்லை, பகவானும் யோகநித்திரையிலிருந்து எழுந்து கண் விழிக்கவில்லை. என்று ப்ராசீனவாஸனையுள்ள சில கிழவர்கள், கிழவிகள் கிராமமூலையில் கதறிக்கொண்டிருக்கிறார்கள். பகவானும் கண்விழித்துக் காப்பாற்றுவாராக. பண்டிதர்களும் ஔதாஸீன்யத்தை விட்டொழிப்பார்களாக,

பத்திராதிபர்

ப்ரமோத-௵ மாசி-௴ ௨௧௳

ஆர்யதர்மம்.

5. ஆயாஸமில்லாமை.

ஐந்தாவது ஆத்மகுணம் ஆயாஸமில்லாமையாம். அதன் ஸ்வரூபத்தை பிருஹஸ்பதி பகவான்—

यदारम्भे भवेत् पीडा नित्यमत्यन्तमात्मनः ।
तद्वर्जयेद्धर्म्यमपि सोऽनायासः प्रकीर्तितः ॥

“எதைச் செய்ய ஆரம்பிக்கையில் நித்தியமும் மிகவதிகமாகத் தனக்குப் பீடை உண்டாகுமோ அது தர்மத்தைத் தழுவியதாயினும் விலக்கத்தக்கதே. அதுவே ஆயாஸமில்லாமையெனப்படும்” என்று கூறியிருக்கின்றார். நிவிருத்தி மார்க்கத்தில் நிற்பவர்களுக்கு எவ்வித சிரமமுமுண்டாக இடமில்லை. பிரவிருத்தி மார்க்கத்தில் உள்ளவர்களுக்கோவெனில் ஆயாஸமுண்டாகாமலிருக்காது. எவ்வித்திலேனும் ஏதேனுமோராயாஸம், நேர்ந்தே தீரும். ஆனால் புத்திமான் அதிக ஆயாஸப்படாமலிருக்கவேண்டும். அதற்காக எந்தக்காரியம் செய்ய ஆரம்பிக்கும்பொழுதும் இதிலிருந்து எவ்வளவு ஆயாஸமுண்டாகக்கூடுமென புத்திவலிமையால் ஊகித்தறிந்துகொண்டு ‘அதிகமான ஆயாஸம் நேரக்கூடியதாகத் தோன்றுமானால் அதை ஆரம்பிக்காமலே ஒழித்திடவேண்டும். அதிகப் பிரயோஜனம் கிடைப்பதற்காக ஸ்வல்ப்பமான ஆயாஸம் நேரிடுமாயின் அதை ஸஹித்துக்கொண்டாவது அந்த மஹாப்பிரயோஜனத்தைச் சாதிக்கலாம். பிரயோஜனம் மிகவற்பமாயிருந்து ஆயாஸமதிகமானால் அப்படி ஆயாஸப்படக் கூடாது. தர்மத்திற்கு ஹிதமான காரியமாயினும் அதிக ஆயாஸத்தை விளைவிக்குமானால் அதையும் விளக்கவேண்டியதுதான். ஏனெனில் ஒரு சின்ன தர்மகார்யத்திற்காக அதிக ஆயாஸப்பட்டால் சாரீரமாகவோ,மானஸிகமாகவோ அநேக ரோகங்களுக்கிடமாகி வேறொரு கார்யத்தையும்,செய்யச் சரீரமே ஸ்வாதீனப்படாமற்போய்விடும். அதிக ஆயாஸப்படாமலே எளிதில் செய்யக்கூடிய தர்மங்கள் பலவிதிக்கப்பட்டிருக்கின்றன. நித்திய கர்மங்களைத் தவறாது செய்து வருவதில் ஒருவிதமான சிரமமும் நோ

வழியில்லை. அழிந்துபோகக்கூடிய அற்பப்பலனைத்தரும் காம்ய கர்மங்களிலீடுபட்டு அதனைச் சாதிக்க, படாத பாடெல்லாம்பட்டு சாதிப்பதைவிட அதை அடியோடு விட்டொழிப்பதே நலமாகும். தர்மகார்யத்திற்காகக்கூட ஆயாஸப்படக்கூடாதென்றால் அதர்மத்தைச்செய்ய ஆயாஸமெடுத்துக் கொள்ளக்கூடாதெனச் சொல்லவும் வேண்டுமோ? தற்காலத்தில் சிலர் தர்மஸம்பந்தமிருப்பதாகக் கனவிலும் நினைக்கமுடியாததும், அதர்மமே அதிகமாயிருப்பதாக நிச்சயிக்கக்கூடியதுமான ஒரு சிறிய கார்யத்தையே பெரிதாகப் பாவித்துப் பாலகருக்குப் பிராந்தியைப் புகட்டி பெரியோரிடம் பழியைக்கூறிப் பாபத்திற்கே ஆளாகிறார்கள். புது நாரீகப்பிசாசு பிடித்து ஆட்டிவைக்குங்கால் பழய பண்டிதர்களின் பேச்சுக் காதிலெங்கே விழப்போகிறது. ஆயினும் எல்லோரும் சுகமாக வாழவேண்டுமெனக் கண்டகண்ட தெய்வங்களை எல்லாம் கையெடுத்துக் கும்பிட்டு வேண்டிக்கொண்டுவரும் பண்டிதமணிகள், எவர் எந்த விதண்டைபேசினாலும் பண்டைய வழக்கத்தையே திரும்பத்திரும்ப போதிப்பார்களேயன்றிக் கண்டவர் பேச்சைக் காதாலும் வாங்கமாட்டார்கள். அப்படி கருணையால் உபதேசிக்கும் பெரியார் சொற்படி சிரமப்படாமல் புருஷார்த்தங்களை ஸாதிக்கவேண்டும். வைத்ய நூல்களிலும் "சரீரம், வாக்கு, மனது இவைகளுக்கு சிரமமுண்டாவதற்கு முந்தியே அவைகளின் சேஷ்டைகளை நிருத்திவிடவேண்டியது" என்று சொல்லப்படுகிறது. ஸாஹஸகார்யத்தில் பிரவிருத்தித்து சிரமப்படக்கூடாதென்று நீதி நூல்களும் நியாயமாகப் போதிக்கின்றன. அதிக பலமுள்ளவனுக்கு ஆயாஸமுண்டாயினும் தோன்றாது. அற்ப பலமுள்ளவனுக்கு சின்னகார்யத்திலும் அதிக சிரமமுண்டாய்விடும். இப்பொழுது காலஸ்வபாவத்தால் ஸர்வ பிராணிகளுக்கும் பலங்குறைந்து வருகிறது. சிரமத்தை ஸஹித்துக்கொள்ள சக்தி கிடையாது. சிராத்தத்தினத்திலும் காலையில் காப்பிக்குடியில்லாத சிரமத்தைச் சஹிக்கமுடியவில்லையென்றால் மற்ற கார்யங்களில் கேழ்க்கவேண்டுமா? அவ்வளவு துர்பலமான பிராணிகள் பாபத்தில்புகுந்து சிரமப்படாமல் அனாயாஸமென்னுமாத்தும குணத்தையடைந்து சிரேயஸ்ஸை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆஹார நியமம்.

(115 பக்கத்தொடர்ச்சி)

वामहस्तेन यो भुङ्क्ते योऽपः पिबति वा द्विजः ।
सुरापानेन तुल्यं स्यादित्येवं मनुरब्रवीत् ॥

என்பதால் இடது கையினால் ஜலபானம் செய்வதையும் சாப்பிடுவதையும் சுராபானத்திற்கு ஸமமாக மனு சொல்லியிருப்பதால் இடது கையினாலும் ஜலபானம் செய்யக்கூடாதென்று ஏற்படுகிறது. இனி என் செய்வது என்று ஸம்சயம் உண்டாகவே அதை நிவர்த்திக்கிறார்.

भुंजानो दक्षिणं बाहुं न संयुज्यात् कदाचन ।
उद्धृत्य वामहस्तेन तृषार्तस्सलिलं पिबेत् ।
वामेनैव पिबेत्तोयं भोजने पात्रमत्यजन् ॥

என்பதால் போஜனகாலத்தில் ஜலபானத்திற்கு வலதுகையை உபயோகிக்கக்கூடாது. போஜன பாத்திரத்தை வலது கையினால்விடாமல் இடது கையினாலேயே போஜனகாலத்தில் ஜலபானம்செய்து தாஹத்தை சமிப்பிக்க வேண்டும். இப்படியாகில் இடது கையினால் ஜலபானம் செய்வதை நிஷேதித்திருப்பதற்கு கதி என்னவெனில் போஜனகாலம் தவிர இதரகாலத்தில் இடது கையினால் ஜலபானம் செய்யக்கூடாதென்று அறியவும்.

पीतावशेषितं पीत्वा पानीयं ब्राह्मणः क्वचित् ।
त्रिरात्रं तु व्रतं कुर्यात् वामहस्तेन वा पुनः ॥

பானம்செய்துபிறகு பாத்ரத்தில் மிகுந்திருக்கும் ஜலத்தைப்பானம் செய்தால் மூன்றுநாள் விருதம் இருக்கவேண்டுமென்று நிஷேதித்திருப்பதால் பாத்திரத்தில் பானம்செய்தபின் மிகுந்திருக்கும் ஜலத்தை உபயோகிக்கக்கூடாது. ஆனால்,

पावशिष्टं तु यत्तोयं पाने पादावनेजने ।
भूमौ तदंबु निस्राव्य शिष्टं तत्पानमर्हति ॥

பாத்திரத்தில் மிகுந்திருக்கும் ஜலத்தில் ஸ்வல்பம் பூமியில்பெருக்கிவிட்டு பாக்கியிருக்கும் ஜலத்தைப்பானம் செய்வது தோஷமல்ல. இனி போஜனகாலத்தில்,

दर्व्यादेयं श्रृतान्नं च समस्तव्यंजनानि च ।
तैलपक्वमपक्वं च न तु दर्व्या कदाचन ॥
अपक्वं स्नेहपक्वं च हस्तेनैव प्रदापयेत् ।
आयसेन तु पात्रेण यदन्नमुपदीयते ॥
शुनोच्छिष्टमसौ भुङ्क्ते पाता तु नरकं व्रजेत् ।

ஆஹாராதிகளைப் பரிமாறுகையில் அன்னத்தையும் காய்கறி முத லியவைகளையும் இரும்பு தவிர பித்தளை முதலிய கரண்டியால் பரி மாறவேண்டும். எண்ணெயில் பக்குவமானதையும் பக்குவம் செய் யப்படாத பழம் முதலியவைகளையும் கையினாலேயேபரிமாறவேண் டும். ஒருபொழுதும் கரண்டியால் பரிமாறக்கூடாது. இரும்பு பாத்திரத்தினால் பரிமாறப்பட்ட அன்னாதிகளைப்புஜிப்பவன் நாயின் உச்சிஷ்டத்தை சாப்பிட்டவனாகிறான்.

இரும்பு பாத்திரத்தினால் பரிமாறுகிறவனோ நரகடசெல்கின்றான் என்றும் சாஸ்திரங்கள் விதிக்கும் கட்டளையை அனுசரித்து ஆகா ரத்தைப் புஜித்து பிறகு உத்தராபோஜனத்தை அதற்குச் சொல் லிய மந்திரத்துடன் பாதியை பாக்கிவைத்துச் சாப்பிட்டுப் பாக்கி இருக்கும் பாதியை,

रौरवेऽपुण्यनिलये पद्मार्बुदनिवासिनाम् ।
अर्थिनामुदकं दत्तमक्षय्यमुपतिष्ठतु ॥

என்கிற மந்திரத்தினால் பூமியில் விடவேண்டும். பிறகு கையை சுத்தி செய்துகொண்டு ஆசமனம் செய்து ஹிருதயத்தை மந்திரத் தினால் தொட்டு மறுபடியும் ஆசமனம் செய்து மந்திரத்தினால் வலதுகால் பெருவிரலில் முழங்கை வழியாய் ஜலத்தைப் பெருக விட்டு முன் பிராணாஹுதி செய்திருக்கிற அன்னத்தை அனுமந்த ரணம் செய்து ஆத்மாவை பரமாத்மாவுடன் சேர்க்கவேண்டும். இம்மாதிரி செய்கிறவன் ஆத்மயாஜியாகிறான். இவனே ஸகல யக்ஞங்களையும் செய்தவனைவிட மேலானவன். கீழ்சொன்ன உத் தராபோசனம் முதலியவைகளின் மந்திரங்கள் உபதேசத்தினால் தெரிந்துகொள்ள வேண்டியவைகளாகையால் இங்கு அவைகளை சொல்லவில்லை.

இனி ஆஹாரத்திற்கு அடுத்தாற்போலுள்ள தாம்பூலசர்வ ணத்தின்விசேஷங்கள் சொல்லப்படுகின்றன. பூஜாகாலத்தி

பகவானுக்கு நிவேதனம்செய்த தாம்பூலத்தைப் போட்டுக்கொள்வதில் முதலில் வெற்றிலையை போட்டுக்கொண்டு பிறகு பாக்கைப் போட்டுக் கொள்ளவேண்டும். பாக்கை முன்னுடி போட்டுக் கொண்டால் தாரித்திரியம் அநேக ஜன்மங்களிலுண்டாகி பகவத் பக்தியும் இல்லாமல் போய்விடுகிருன். வெற்றிலையின் அடியில் வியாதியும் நுனியில் பாபமும் நடு நாம்பில் புத்தியைக் குறைக்கும் தன்மையும் இருப்பதால் வெற்றிலையின் அந்தப் பாகங்களை உபயோகிக்கக்கூடாது. சுண்ணும்புவைத்த வெற்றிலையின் உபயோ யோகத்தினுல் ஆயுஸ்ஸு குறையும். தாம்பூலம் வாயிலிருக்கும் போது செய்யும் ஜலபானம் ஸுராபானத்திற்கு ஸமமாகும் என்பதைப் பின்வரும் ஸ்மிருதி வசனங்கள் வெளியிடுகின்றன.

मुखे पर्णमनिक्षिप्य पूगं खादति यो नरः ।
सप्तजन्मदरिद्रस्स्यादन्ते विष्णुं न संस्मरेत् ॥
पर्णमूले भवेद्व्याधिः पर्णाग्रे पापसंभवः ।
चूर्णपर्णं हरत्यायुस्सिरा बुद्धिविनाशिनी ॥
सुरापानसमं ज्ञेयं तांबूलेन सहोदकम् ।

இவ்வளவு தூரம் நிரூபித்ததிலிருந்து நமது ஆஹாரமுறையிலுள்ள விசேஷங்களையும் ரஹஸ்யங்களையும் நமது பிராமண ஸகோதரர்களும் அல்லாதார்களும அறிந்துகொண்டு காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப கூடியவரையில் சாஸ்திரீயமுறைகளைத்தவருமல் நடத்தவேண்டும். தற்காலம் வர்ணுசிரம தர்மமானது நமது தேசம் முன்னேற்றமடைவதற்கு மிகவும் இடையூருக இருப்பதாகக்கருதி வர்ணுசிரம தர்ம கோட்பாட்டைக் காலத்திற்குத்தக்கபடி முக்கிய கல்ப மன்னியில் கொஞ்சம் குறைவாக அனுஷ்டித்து நம்மிந்திய ஸமூகத்தில் பிளவு ஏற்படாமல் செய்துகொண்டு நாம் ஒற்றுமையுடனிருந்து கிளர்ச்சி செய்தால்தான் ஆங்கிலேய கவர்ண்மேண்ட் நம்மிந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கும் என்று வர்ணுசிரம தர்மத்தில் துவேஷபுத்தியற்றவர்களும் உண்மையான தேசபக்தியும் மதப்பற்றுமுள்ள பிராமணர்களும் பிராமணேதார்களும் கருதுகிறுர்கள். இந்த ஏற்பாட்டிற்கு இணங்கவேண்டியவர் வர்ணுசிரம தர்மத்தில் உண்மையான ஆஸ்தையுடைய தேசாபிமானிகளான பிராமணர்பிராமணரல்லாதார் என்ற இரு திறத்தோருக்கும்கடமையேயாயினும்அடியோடுபிராமணர், க்ஷத்திரியர்

வைச்யர், சூத்திரர் என்கிற ஜாதி வியவஸ்தையைத் துலைக்கக் கூடிய ஸஹபோஜனம், (அதாவது பஞ்சமர்களுள்பட எல்லோ ரும் சேர்ந்து புசிப்பது) இதே மாதிரியான கலப்பு விவாகம். த்வி ஜர்கள் ஸமுத்திரயாத்திரை செய்வது என்பதுபோன்ற மிகக் கடுமையான பாபச்செயல்களுக்கு இணங்கினால் நமது ஹிந்து ஸமூஹமே பெயர்கூட இல்லாமல் வெகு சீக்கிரம் அழிந்துவிடும். கீழ்வர்ணத்தாருடன் செய்யும் ஸஹபோஜனம் கலப்பு விவாகம் இவைகளினால் பிராமண ஸமூஹம்மட்டும் அழிந்துவிடுமென்று நம் ஸகோதரர்களான பிராமணரல்லாதார்கள் நினைக்கவேண் டாம். முந்திய நான்கு ஜாதிகளும் வேருடன் நசித்துப்போய் உலகம் முழுவதுமே பஞ்சம ஜாதியாகிய சண்டாளஜாதியாக மாறிவிடும். நாம் அனைவரும் ஒரேகட்டுப்பாடாய் இன்றைக்கே அந்தமாதிரியாகிவிட்டபோதிலும் உடனே பிரிட்டிஷார் பூர்ண கும்பத்துடன் இந்தியர்களை அழைத்து ஸ்வராஜ்பத்தைக் கையில் கொடுத்து விடமாட்டார்கள். தங்கள் மதத்தினர்களான ஐர் லாந்தினர்களுக்கு எளிதில் கொடுக்கிறார்களா என்பதைக் கவனிக் கவும், भक्षितेऽपि लशुने न शान्तो व्याधिः

வெங்காயத்தைச் சாப்பிட்டும் வியாதிபோகவில்லை என்றும் கணக் கில் பிராசீனமான ஹிந்துமதம் ஸமூலமாக அழிவதுதான் மிஞ்சு மேயன்றி ஸ்வராஜ்யம் ஹிந்துமதத்தை அழித்துவிடுவதால் கிடைக்காது. ஸ்வயராஜ்யம் நாமடைய வேண்டுமானால் ஒற்று மைக்குறைவன்னியில் நாம் நடக்கவேண்டும். அது விஷயத்தில் பிராமணர்களுக்கும் ஜஸ்டிஸ்கக்ஷியைச்சேர்ந்த பிராமணரல்லாதார் களுக்கும் யாதொரு அபிப்பிராய பேதமும் கிடையாது. இப்படியி ருக்கையில் வேறுசில பிராமணர்களும் அல்லாதார்களும் நடந்து இந்தியாவானது ஜாதிபேதத்தினால் இதர நாடுகளைப்போல்சிக்கிரத் தில் நல்லஸ்திதிக்கு வரவில்லையென்று தப்பானஎண்ணங்கொண்டு ஜாதிபேதத்தைத் துலைத்துவிடவேண்டியதற்காக அனேக சங்கங் கள் சேர்த்துக்கொண்டும் பத்திரிகைகளை அதற்காகப் பிரசுரம் செய்துகொண்டும்வருகிறார்கள். அவர்களின் எண்ணப்படி எல்லா ஜாதி வித்தியாஸங்களையும் அழித்துப் புதிதாய் உண்டுபண்ணவே ண்டியஜாதிபஞ்சமஜாதியைத்தவிர வேறாக இருக்கமுடியாதென்று முன்னமே நிரூபித்தாகிவிட்டது. காலத்தின் போக்கும் அவர் களின் எண்ணத்திற்கு அனுகூலமாகவேதானிருக்கிறது. அவர்

களின் எண்ணம் நிறைவேறிவிட்டால் ஜனஸங்கியையில் நூற்றுக்கு 96 வீதமுள்ள பிராமணேதரர்களுக்கு கிடைக்கும் லாபநஷ்டங்களில் பாக்கி 4 வீதமுள்ள பிராமணர்களில் நாஸ்திகர்களான பிராமணர்களும் ஏகதேசமான பாகத்தையடைந்து அதனால் நேரிடும் பிரயோஜனத்தை அனுபவிக்கட்டும். வேதத்தில் நம்பிக்கையும் வர்ணாசிரமதர்மங்களில்சிரத்தையுமுடைய ஆஸ்திகர்களான பிராமணர்களும் பிராமணேதரர்களும் எவ்வளவு ஆபத்துக்கள் நேரிடினும் ஒருக்காலும் வேதமார்க்கத்தை விட்டு விலகமாட்டார்கள். ஆகிலும் நமது வர்ணாசிரமதர்மத்திற்கு விரோதிகள் ஆங்காங்கு ஸபைகளைக்கூட்டி ஒன்றுமறியாத சில ஜனங்களின் புத்தியைப் பேதித்தும் ராஜாங்க விஷயங்களை ஆலோசனை செய்வதற்காகக் கூடிய சட்டசபைகளில் மதஸம்பந்தமான விஷயங்களைக்கொண்டுவந்து பிராசீனமார்க்கத்திற்கு விருத்தமாகச்சட்டங்களைச் செய்துவிடுகிறார்களாகையால்ஆஸ்திகர்களானநாமும் ஸபைகளைக்கூட்டி வர்ணாசிரமதர்மங்கள் நிலைத்திருப்பதற்கு ஸாதகமான தீர்மானங்களை நிறைவேற்றி அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமாய் ஸபையோர்களைப் பிரார்த்திக்கிறேன்.

வே. ஸ்ரீநிவாஸதாதாசாரியார்

வைதிகவிநோத சம்பாஷணை.

(113-வது பக்கத்தொடர்ச்சி)

தக:— சாஸ்திரம் சரியன்று, பிரத்தியக்ஷமே சிறந்தது-என்பதாதி முன் கூறினையே. அந்த வியஹாரத்திற்கு விவேகம் காரணமா? அவிவேகம் காரணமா?

புத்:— விவேகமிருப்பின் இப்படிச்சொல்லுவேனா? அவிவேகத்தால் தான் இந்த வியஹாரம் நேருகின்றது.

தக:— அங்ஙனமாயின் சரீரத்தைவிட ஆன்மா வேறெனஎவ்விதம் தெரிந்துகொண்டாய்? அதற்குப் பிரமாணம் எது? குடமும், படமும் வேறெனக்கண்டு அவற்றின் வேற்றுமையைத் துணிந்ததுபோல-ஆத்துமா வேறு-சரீரம் வேறென எந்தப் புலனால் கண்டு துணிந்தாய். உலகத்தில்—"தேவதத்தன்

பண்டிதனென அறிவேன்- யான் பண்டிதன்- எனக்குப் படிப்பு மிகுதியுண்டு-ஆயினும் புத்தியின் தோஷம் மேன்மேலும் தோன்றும் பிரதிபா சக்தியைத் தடுக்குகின்றது-இந்தப் பைத்தியக்காரன் பித்தாதிக்கத்தா லுலகத்தைப் பலவிதமா யறிகிறான்-என்பதாதி பற்பல வியவஹாரங்கள் நிகழ்கின்றன. அன்றியும்-பிறந்தான் தேவதத்தன்- புரள்கிறான் தேவதத்தன் பிராமணன் தேவதத்தன் என்பதாதி ஜாதி குணக்கிரியைகளைப் பற்றிய வியவகாரம் வருகின்றது. இதுவோ பகுத்தறிவுண் டாயதுமுதல் மாணபரியந்தம் பண்டித பாமர ஸாதாரணமாக இருக்கின்றது. இவைகளை மறுக்கும் பிரமாணமெது. ஆத்துமா வினிடத்தில் ஜாதி குணக் கிரியைகள் அஸம்பாவிதமல்லவா?

புத்.— நீங்கள் கூறியதெல்லாம் சரியே ஆனாலும்-சரீரம் சிறிது பெரிதென அவயங்களேறவும் குறையவும் காணப்படுவதால் சரீரம் வேறுபடும் ரோகாதிகளாலும் வேற்றுமைப்படுவதுண்டு. நான் என்னும் புத்திமட்டில் மாறாமல் தொடர்ச்சியாக அதே விதமாக இருக்கிறது. ஆகையால் இவ்வித விகாரத்தை யடையக்கூடிய சரீரத்தைக்காட்டிலும் அவிகாரியான ஆத்துமா வேறென்றே நினைக்கிறேன்.

தக.— இங்ஙனமாயின் விசாரிக்காமல் வேதாந்தங்களைக் குற்றங் கூறுவதெப்படி? முற்றும்படித்தால் உனக்குண்மை விளங்கு மென்றார்.

ஜப்யேசன்:— இவ்வாறு என்பிதா உபதேசித்தபின் அவரிடத்தில் அந்த மூன்று பிரஸ்தானபாஷ்யங்களையும் படித்தேன்.

ரங்:—ஐயா! மூன்று பிரஸ்தானங்களென்பன யாவை

ஜப்:— ஸூத்திரப் பிரஸ்தானம் உபநிஷத்பிரஸ்தானம், ஸ்மிருதி (கீதா) ப்பிரஸ்தானம் என மூன்று.

ரங்:— இம்மூன்றுப் பிரஸ்தானங்களின் பாஷ்யங்களையும் ஒரே ஆசிரியனா எழுதியது?

ஜப்:— ஆம் அதிற்சம்சயமென்ன ?

ஆந.— ஆமாம்-எங்களுக்கு மப்படித்தான்.

ஜப்:— பிரகிருதத்தை நடத்துங்கள். நான் சொன்னகதையில் நீங்களென்ன அறிந்தீர்கள்.

ஆந:— உண்மையை விசாரிக்கத்தான் வேண்டும். விசாரிக்காத பக்ஷத்தில் எத்தனைகோடி ஜன்ம மெடுத்தாலும் உண்மை வெளிப்படாது.

ரங்:— நீர் சொல்லுவது சரிதான். உலகவழக்கை எவ்விதமாக வாவது பிரித்து சரிப்படுத்திக்கொள்வோம். பிரத்தியக்ஷம் மட்டும் பிரபல மென்றுதான் இன்னமும் தோன்றுகின்றது. நண்பனே! சப்தமட்டும் பிரமாணமாவதற்கு ஒன்று காட்டுக- ஒவ்வொருவனும் சொல்லுவதும் முன்கண்டதே.

ஜப்:— ஒநண்ப! நான் சொன்னகதையின் ஸாரத்தைநீர் தெரிந்து கொள்ளவில்லை. ஆயினும் இன்னொன்று சொல்லுகிறேன். உலகத்தில் தாய் பிள்ளையென்பது எப்படி வருகின்றது?

ரங்:— தாயார் கர்ப்பவதியாய்ப் பிள்ளையைப் பெறுகிருள். தன் பிள்ளையென்று தெரிந்துகொள்ளுகிருள். அப்படித்தாய் பிள்ளையென்று வியவஹரிப்பதால் அவள் புத்திரன்தானென்று தெரிந்துகொள்ளுகிருன். ஆதலால் பிரத்தியக்ஷமே மூலம்.

ஜப்:— நன்கு கூறினுய், தாய் விஷயத்தில் பின் பேசுகிறேன். தகப்பன் தன் பிள்ளையென்று காண்பதெப்படி?

ரங்:— பதிவிரதையாகிய தன் பத்தினியிடத்துப் பிறந்தபிள்ளை தன் பிள்ளையென்று மதிக்கிருன்.

ஜப்:— இவள் அவ்வளவு கற்புடையவள் தானென்று அறிவத தெப்படி?

ரங்:— நல்லசிலம் முதலியவற்ருற்ருன்.

ஜப்:— இவைகளெல்லாம் தோஷமற்ற ஹேதுக்களாமோ?

ரங்:— சிலவிடத்து இந்தஹேதுக்கள் மாறும்.

ஜப்:— அங்ஙனமாயின் இந்தப்பிள்ளை யெனதுதான் என்று எவ் விதம் நம்பிச்சொல்லுவது?

ரங்:— தனது மனைவியின் வாக்கியத்தை ஆப்தவாக்கியமாக நம்பித்தான்.

ஜப்:— ஆனுல் அந்தப் பிரமாணத்திற்குப் பெயரென்ன?

ரங்:— சப்தமென்றுதான்.

ஜப்:— அன்பனே! கொஞ்சமாலோசித்துப்பார். கர்ப்பந்தரிக்கும் காலத்துப் பெண்களுக்கு ஓர்வித உணர்வு கருக்குழியிலுண்

டாகுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதைப் பிதா அறிவதில்லை. அவ்வுண்மையைக் கண்டறிந்த ஓர் பெண் தன் புருஷனிடம் தனக்குத் தோன்றிய உணர்ச்சியை வெளியிடுவா ளானால் அச்சமயம் புருஷன் தனக்கு ஓர் தந்து உண்டானதாக நம்பலாம். அங்கு சப்தப்பிரமாணமின்றி வேறு பிரமாண மில்லை. கர்ப்பமுண்டாயினும் உண்டாகாவிடினும் இன்பம் புருஷனுக்குச்சமமே.

ரங்:— ஆமாம். இதிருக்கட்டும். இது ஒன்றன்றி பிரத்தியக்ஷம் துர்பலமென்பதற்கு ஹேது வேறு அகப்படாதோ?

ஜப்:— அனேகமுண்டு, சொல்லுகிறேன். யோகசாஸ்திரத்தில் ஆயுர்விருத்திக்கு நாடிசோதனை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதையனுஷ்டித்த பெரியோர்கள் பலருளர். அவ்விஷயத்தில் அவர் கூறிய சொல்லே பிரமாணமாகின்றதேயன்றி வேறு ப்ரத்தியக்ஷமோ அனுமானமோ பிரமாணமாகாது.

ரங்:— ஆகட்டும், ப்ரத்தியக்ஷப்பிரமாணத்திற்கு விஷயமாகாத விடத்தில் சப்தம் பிரமாணமாகட்டும் எடுத்தவிஷயத்திலென்ன ஆயிற்று?

ஜப்:— வேறு எடுத்த விஷயமென்ன?

ரங்:— ஜகத்தை மித்தையென்கிறீர். ஜீவனும் ப்ரம்மமுமொன்று என்கிறீர். அதல்லவா பிரகிருதம்?

ஜப்:— அது பிரகிருதமானால் அதைப்பற்றி விசாரம் செய்வோம் பிரத்தியக்ஷந்தான் சிறந்த பிரமாணமென்ற விஷயம் என்ன வாயிற்று? மத்தியஸ்தர் சொல்லட்டும்.

ரங்:— கேட்கத்தான் வேண்டும்.

ஆந:— என்னடா கேட்கிறது? ஜப்யேச்வரன் சொன்னதுதான் சரியாயிருக்கிறது. மேலே விஷயம் நடக்கட்டும். முடிவில் சேர்த்துச் சித்தாந்தம் சொல்லிவிடுகிறேன்.

ரங்:— ஐய ஜப்யேசுவரசர்மா! இதுவரையில் பிரத்தியக்ஷப் பிரமா ணத்தை சப்தப்பிரமாணத்தைக்காட்டிலும் துர்பலமென்று சாதித்தமையால் நீர் அடைந்த பயன் யாது? உலகத்தில் பல பொருள்கள் சொல்லால்மட்டும் அறியக்கூடியதாயும் பிரத்தி யக்ஷத்தால் அறியக்கூடாததாயும் இருக்கலாம். அதனால் எங்

கும் ப்ரத்தியக்ஷத்தைவிட சப்தமே ப்ரபலப்ரமாணமாமோ? எல்லா சப்தமும் ப்ரமாணமாமோ? அப்படியானுல் 'மலடிமைந்தன், குதிரைக்கொம்பு, ஆகாயமலர்' இத்யாதி சொற்களும் ப்ரமாணமாய்விடுமோ? ஒரு பொருளை உணர்த்திடுமோ? அவ்வகைப்பொருளுமிங்கு இருக்கக்கூடுமோ? அங்ஙனம் தோற்ற மாத்திரத்தால் சித்திக்கும் பொருள் வியவஹாரத்திற்குமுபயோகமாமோ? அர்த்தசூன்யமான அவ்வியவஹாரத்தால் பயன்தானென்ன? பயனில்லாவிடம் அதை சப்தத்தால் சாதித்தல் எதற்கு?

ஆந:— நண்ப ரங்கராஜசர்மா! நன்ருகக் கேட்டீர். இதற்குச் சரியான சமாதானத்தை நண்பர் ஐப்யேசுவரரிடம் எதிர்பார்க்கின்றேன்.

ஜப்:— ஓ மித்திர! அறியாது வினவினுய். சப்தம் ப்ரத்தியக்ஷத்திற்கு மேலானது என்றேனேயன்றி அப்படிப்பட்ட ப்ரமாண சப்தம் 'ஸத்தையே கூறும்' என்று சொல்லவில்லை. ஸத்தோ, அஸத்தோ எல்லாவற்றையும் சப்தம் எடுத்துணர்த்தும். ஆகலாற்ருன் ஆன்ருேர்—

अत्यन्तासत्यपि ह्यर्थे ज्ञानं शब्दः करोति हि ।

"அத்தியந்தம் அஸத்தாயபொருளிலும் சப்தம் அறிவுண்டாகச் செய்யும்" என்றனர். ஆகையால் நீர் கேட்ட கேழ்விக்கு ஸமாதானம் சொல்லப்பட்டதாயிற்று. ஆகவே சப்தம் சிறந்த ப்ரமாணமென்ருயிற்று. சப்தமும் ப்ரத்தியக்ஷாதிகளும் ஒரேவிஷயத்தில் விரோதப்படுமானுல் ஆங்கு ப்ரத்யக்ஷம் துர்பலமாகும். ஏனெனில் ப்ரத்தியக்ஷம் அநேகவிடங்களில் பொய்யறிவை உண்டாக்கிவிட்டதாலாமென்க. சிப்பியில் வெள்ளியையும் கயிற்றில் பாம்பையும் கானலில் நீரையும் காட்டிவிட்டதல்லவா ப்ரத்தியக்ஷம். பொய்சாக்ஷி சொன்னவன் ஓரிடத்திலுண்மையுரைத்தாலும் நம்பமாட்டார்களன்ருே? ஆகவே இதரப் ப்ரமாணஸம்வாதமிருந்தாற்ருன் அது சரியானதாகும். இன்றேல் ப்ரமஞானத்தைப் புகட்டுவதால் அது அப்ரமாணமேயாம்.

ரங்:—சிப்பியில் வெள்ளியைக் காட்டுவதால் ப்ரத்தியக்ஷம் அப்ரமாணமென்பதெப்படி?

ஜப்:—உண்மையிலில்லாதபொருளை உணர்த்தியதாலாம்.

ரங்:—சிப்பியில் வெள்ளியில்லையென்பது எப்படி? எப்பொழுது பிரத்தியக்ஷமுணர்த்தியகோ, அந்த வெள்ளியிருந்தேதீரும். அத்தியந்தமாக இல்லாமலே இருக்குமானால் அவ்வுணர்ச்சி எப்படியுண்டாகும்.

ஜப்:—சிப்பியில் வெள்ளியிருப்பதாகப் பிரசித்தியில்லையே! அப்படியிருக்குமானால் ஆற்றங்கரை, குளக்கரை முதலிய விடங்களில் இலவசமாய்கிடைக்கும்கிளிஞ்சல்களைப்பொருக்கி வண்டிவண்டியாகக்கொண்டுவந்து அதிலுள்ளவெள்ளியையெடுத்துஏழைகள் ஜீவிக்கலாமே, பணக்காரனுமதிகப்பணம் பெறலாமே. அப்படிக் காணப்படவில்லையே. ஆகவே கிளிஞ்சலில்வெள்ளியிருப்பதாக நம்புவதெப்படி?

ரங்:—கிளிஞ்சலென்பது அதன் அவயவங்களாலும் வெள்ளியின் அவயவங்களாலும் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஆங்கு வெள்ளியின் அவயவங்கள்மிகக்குறைவாயிருக்கின்றன. அன்றியும் அவைகளைப் பிரித்தெடுப்பது மிகக்கஷ்டம். வெள்ளியைப்பிரித்தெடுப்பதற்காகச் சிலவாவதைவிட அதிகம் வெள்ளி கிடைக்காது. வேறுலோகம் கலந்து மாத்துக்கட்டையான ஸுவர்ணத்தைப் புடத்திலிட்டு வேறுலோகத்தைவிலக்கி தனி ஸுவர்ணமாய் எடுப்பதுபோல் கிளிஞ்சிலோடு கலந்த வெள்ளியைப் பிரித்தெடுக்கப் புடம்போட்டால் கிளிஞ்சலோடு வெள்ளியும் கரிஞ்சு சாம்பலாய் விடுகின்றது. அதனாற்றான் ஏழைகளோ பணக்காரர்களோ அதிலிருந்து வெள்ளியை எடுக்கமுயலுவதில்லை.

ஜப்:—யுக்திவாதம் நன்றாய்ப் பேசுகிறீர். கிளிஞ்சலில் வெள்ளியிருப்பதாகக் காட்டுமோர் சரியானப் பிரமாணம் காட்டாவிடில், ஸமுத்திரம் வெட்டியெடுத்த மண்ணை அக்கரையில் போட்ட கதையையொட்டியதாகுமேயன்றி ஐயமறத்தெளிய முடியாது. அங்கோர் பிரமாணம் காட்டவேண்டும்.

ரங்:—திருவிருத்காண சுருதியும்—பஞ்சீகாணப் பிரக்கிரியைகளும் இங்கு பிரமாணங்களாயிருக்கின்றன.

ஜப்:—ஐந்துபூத ஸூக்ஷ்மங்கள் ஸ்தூலமாயில்லாதபடியால் காரியத்திற்கு உபயோகப்படுவதில்லை. அதற்காக அவைகளை ஸ்தூலப்படுத்த பரமேசுவரன் பஞ்சீகரணம் செய்வதாகச் சங்

கற்பித்து ஒவ்வொரு பூதத்தையும் இரண்டுபாதியாக்கி, அதி லொருபாதியை நான்கு பங்குசெய்து மற்றபூதங்களிற்சேர்த் தார். அப்படிச் சேர்க்கையில் ஒவ்வொரு பூதத்திலும் தன் பாகம் அரையும், மற்றநான்கு பூதங்களின் அரைக்கால் அரைக் கால் பாகமும் சேர்ந்து ஸ்தூலமாயிற்று. அதிகாம்சமிருப் பதற்குத் தக்கபடி பெயருமமைந்தது. என்றுதானே பஞ்சீ காணப் பிரக்கிரியையில் கூறப்படுகின்றது. கிளிஞ்சல்—கிளிஞ் சலினவயவங்களும் வெள்ளியின் அவயவங்களும் சேர்ந்துண் டாயிற்று என்பதற்கு இது எப்படிபிரமாணமாகும்?

ரங்:—ஆனால் பிருஹதாரண்யத்தில் மதுப்பிராம்மணத்தில் ஸர்வம் ஸர்வாத்துமகம் (எல்லாம் எல்லாவடிவமானது) என்று நிரூபித் திருப்பதுப் பிரமாணமாகட்டுமே?

ஜப்:—(சிறிது நகைத்து) அப்படியாயின் கிரஹஸ்தர் எல்லோரும் மாதிருகாமியாவாரெனல் வேண்டும். எப்படியெனில்—"ஸர் வம் ஸர்வாத்துமகம்" என்றால் பார்யையும் தாயின் வடிவமே. ஆகவே ருதுகாலத்தில் விதிப்படி பார்யாகமனம் செய்பவன் மாதிரு காமியாகிறானென்று சொல்லவேண்டியதாய்விடுகிறது பஞ்சீகாணப் பிரக்கிரியைப் படிக்கும், பார்யையின் சரீரம் அதன் அவயவங்களாலும் தாயின் சரீராவயவங்களாலும் சேர் ந்து ஆரம்பிக்கப்பட்டதாகவரும். அப்பொழுதுமிந்ததோஷ முண்டு. ஆகவே இதெல்லாம் இவ்விஷயத்தில் பிரமாணமாகா.

ரங்:—இஃதிருக்கட்டும். உண்மையில்லாத வெள்ளியை க்கிளிஞ் சலில் காட்டியதாலன்றோ அந்தப் பிரத்தியக்ஷம் பிரமாணமாகா தென்றீர். அதுபோல் சப்தப்பிரமாணமும் "மலடிமகன் முயற்கொம்பு" முதலிய துச்சமான இல்லாப்பொருளை விளக்கு வதால் அதெப்படி சிறந்தப் பிரமாணமென்கிறீர்?

ஜப்:—இந்தக் கதையைப்பற்றி என்னைமாத்திரம் கேழ்ப்பானேன். நீங்களும்சப்தப்பிராமாண்யவாதிகள்தானே; உம்முடைய மதத் தில் அப்பதங்களுக்குப் பொருளென்ன? ஆங்கு பதப்பொரு ளெது? ஸமாஸார்த்தம் (தொகைப்பொருள்) எது.

ரங்:—இங்கு தார்க்கிகர் எவ்விதம் முடிவுரை கூறினரோ! அவ்விதம்தான்.

ஜப்:—அதை உள்ளேவைத்து மூடிவைப்பதில் பயன்யாது? 'மலடி மகன்' முதலிய சப்தப்பிரயோகங்களில் 'மலடிமகன்' என்ப தாதிபதங்கள் ஸமாஸபதங்களாம். அவைகளின் பொருள் ஸமாஸார்த்தம் எனப்படும். ஸமாஸதபதங்களில் ஒன்றுக்கு மேல் இரண்டோ, மூன்றோ, அதனிலுமதிகமோ பதங்களிருக் கும். அவை ஒவ்வொன்றின் பொருள் ஆங்கு பதப்பொரு ளாகும். அந்தப்பதப்பொருள்களெல்லாம் பிரசித்தமாயுள்ள வைகளே. அதாவது 'மலடிமகன்' என்றதில் 'மலடி' என்ற ஓர் பதமும், 'மகன்' என்றமற்றோர்பதமும்சேர்ந்து 'மலடிமகன்' என்றது ஸமாஸபதமாயிற்று. அதில் 'மலடி' என்ற பதத்தின் பொருளும் 'மகன்' என்ற பதத்தின் பொருளும் பிரஸித்தமா யுள்ளவைகளே. அவ்விருவர்களின் ஸம்பந்தமட்டுமில்லை. மனதாற் கற்பிக்கப்பட்டதாமது. 'விகல்ப' மென்னும் மனோ விருத்திக்கு விஷயமாகக்கூடியதென பதஞ்சலிபகவான் கூறி யுள்ளார். அப்படிக்கற்பிதமாய ஸம்பந்தமே ஆங்குஸமாஸார்த் தமாகும். ஆகவே அஸத்தானபொருள் ஒரு சப்தத்தால் தோன்றினுல் மற்றப் பிரமாணங்களாலும் விசாரித்தே பிரமா ணமா அல்லவாவெனத் தெரிந்துகொள்ளவேண்டும். அன்றி யும் இரண்டுப்பிரமாணவாக்கியங்கள் ஒரு விஷயத்தில் விரோ தப்பட்ட உணர்வை உண்டாக்கினுல் ஆங்கும் வேதானுஸாரி யான அநுமானத்தாலும், பிரத்தியக்ஷாதிகளான மற்றப்பிர மாணங்களின் ஸஹாயத்தாலும் எதுயுக்தமென்றுணரப்படுமோ அதைக்கூறும் வாக்கியத்தைப் பிரபலமாகக் கொண்டு அதைய னுஸரித்து மற்றவாக்யத்திற்கு அர்த்தம் சொல்லவேண்டும். ஆகவேசப்தம்ஸஜாதீயமான சப்தாந்தரத்தோடு மாறுபடுமிடத் தில் மற்றப்பிரமாணங்களும் வாக்யார்த்த நிர்ணயவிஷயத்தில் உபபலமாகலாம்.

ரங்:—ஹீ ஹீ சப்தமும் சிலவிடத்தில் வேறுபிரமாணத்தையபே க்ஷிக்குமோ. ஆனுல் அது பிரபலமாவது எங்ஙனம். சுற்றிச் சுற்றி என் வழியிலேயே இரங்கினீர்போலும்.

ஜப்:—மித்ரா இதுகொண்டுமட்டும் களிக்கவேண்டாம். உலகத் தில் ஸமபலர்களான இரண்டு வீரர்கள் போர்செய்யுங்கால் ஒருவன் பக்கத்தில் நின்று ஒரு சிறு ஸேவகன் கொஞ்சம்

ஸஹாயம் செய்வானுகில் அவன் சேர்ந்த ஆதிக்கத்தால் அந்த வீரன் பிரபலனுவான், ஜயிப்பான். மற்ற வீரன் இவனை அனு ஸரித்து நடந்துகொள்வான். ஆங்கு அச்சேவகனுக்கு அவ் வீரன் கீழ்ப்பட்டவனுய்விடமாட்டான். ஸேவகனைவிட தோல் வியடைந்தவனுயினும் வீரன் பிரபலனேயன்றே! இதுபோல் இரண்டு ஸமான பிரபலப்பிரமாணங்களுள்ஒன்றைதுர்பலமாகச் செய்யவேண்டி சிறு ஸேவகனுக பிரத்தியக்ஷாதிகளைக் கைக் கொண்டோமென்க. வஸ்துவில் விகல்பமில்லாமையால் ஒரே வஸ்துவில் விரோதப்பட்ட இரண்டினுள் ஒன்றைப் பிரபல மாக்கி அர்த்தநிர்ணயம் செய்யவேண்டியதற்கு பிரமாணுந்தா ஸஹாயம் ஆசிரயிக்கப்பட்டது. கிரியாவிஷயத்திலானுவிரண்டு வாக்கியங்களும் பிரபலங்களே. ஆங்கு விகல்பத்தையாசிரயித்து ஸமாதானம் கூறப்படும். பிரமாணுந்தாஸஹாயம் வேண்டாம்.

ரங்:— எவ்விதமேனுமாகுக, இங்ஙனம் நல்ல ஸமயோபகாரியாகிய பிரத்தியக்ஷமே ஸர்வப்பிரமாணங்களுள் சிறந்ததென்றுல் உமக்குக் கெடுதி யாது?

ஜப்:— யாதுமில்லை. ஆனுலும் யுத்தத்தில் ஸமானப்பிரபலனுன வீர னுடைய ஜயத்திற்குதவின வேலைக்காரனுக்கு வெகுமதிகொடுக் கும்வழக்கமேஉசிதமின்றிராஜ்யாதிகாரம்கொடுக்கலாமா? அன்றி யும் விரோதப்பட்டவிடத்தில் அர்த்தநிர்ணயத்திற்காக பிரமா ணுந்தரம் எதிர்பார்க்கப்படுகிறதேயன்றி நிர்ணயமானபிறகு இதரப்பிரமாணங்களின் அபேக்ஷை சப்தத்திற்குக் கிடையாது. இதனுல் சப்தத்திற்கு பிரபலத்தன்மை கெட்டுப்போகாது. கிளிஞ்சல்வெள்ளி, கானல்நீர், கயிற்றுப்பாம்பு முதலிய பிரத் யக்ஷம். இது கிளிஞ்சல், வெள்ளியல்ல—இது கானல், நீரல்ல-- இதுகயிறு, பாம்பல்ல என்ற பிரத்தியக்ஷத்தாலேயே ஒருஸஹா யமுமின்றி பாதிக்கப்படுகின்றது. ஆகவே பிரத்தியக்ஷம் சப் தத்தைவிட துர்பலமே, நாழிகையாய்விட்டது, மற்றைய விசா ரத்தை நாளைக்கு வைத்துக்கொள்வோம்" என்று எல்லோரும் புறப்பட்டார்கள்.

நாராயணன்.

வடமொழியின் நிலைமை.

வடமொழியானது புராதனஹிந்துக்களின் பாஷை. தெய்வத்தன்மை வாய்ந்தது. அந்த பாஷையில் மேன்மையான அவாக்களும், பெருந்தன்மையான எண்ணங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அப்பாஷை இறந்துபோயிருக்கிறதாக சிலரால் கருதப்படுகிறது. அதாவது அது உலகத்தில் விசேஷவழக்கத்திலில்லை. ஆதலால் அதில் நூதனக்கிரந்தங்கள் எழுதப்படாமல் விருத்தியடையவில்லைஎன்பார் சிலர். இவ்வமயம் நாகரீகமடைந்து பொதுஜனங்களின் நன்மையையே பயனுகக்கொண்டு சாஸ்திரசம்பந்தமான கல்வியைத்தங்களாலியன்றவரையில் விருத்திக்குக்கொண்டுவரமுயன்றவரும் அதற்காக ஒரு வடமொழிப்பத்திரிகையை நடத்திவருபவருமான எமதாசிரியர் திருவாதி ஸ்ரீமான் प्राच्य-विद्येश्वराः (ப்ராச்யவித்யேச்வரர்) அவர்களின் முயற்சியையிங்கு குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை. முன்காலத்தில் இந்தியா விசேஷகல்விக்கும், யோகம் முதலிய சாஸ்திரங்களைப் படிப்பதற்குமான இடமாயிருந்தது. ஸம்ஸ்கிருதத்தின் காம்பீர்யத்தை நாமிப்பொழுது எடுத்துக்கூறுவதனுவச்யம். அப்பாஷையிலிருக்கும் செழிப்பு எவருக்குத்தான் தெரியாது. நடையழகும், வாசகத்தினழகும், அதனைக் கேட்பதினுலுண்டாகும் இன்னிசையும் புராதனகாலம் முதல் இதிலிருக்கும் ஏராளமான சிறப்பை அறியாதவர் சிலரே. இந்துமதாசாரங்கள் முதலியவைகளை மாத்திரமாவது நடத்துவதற்கு வேண்டிய ஸம்ஸ்கிருதத்தையாவது படித்த பிராமணரில்லாத கிராமமில்லை.

பரிசுத்தமான வேதங்களும் மற்றுமுள்ள மதஸம்பந்தமான புஸ்தகங்களும் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஸம்ஸ்கிருதம் தெரியாத இந்துவென்றுல் அவனுக்கு தான் அநுஷ்டிக்கும் மதம் தெரியாதென்பதில் யாது சந்தேகம்? ஒவ்வொரு இந்துவும் தன் மதத்தின் மூலாதாரங்களை மட்டுமாவது அறிந்திருப்பதோடுகூட நாம் செய்யவேண்டிய கடமைகள் இன்னது இன்னதென்று தெரிந்துகொள்ளவேண்டும். இவைகளை அறிய ஸம்ஸ்கிருதபாஷாக்ஞானம் கொஞ்சமாவது இல்லையேல் அறியமுடியாது. ஆகையால் அவரவர்கள் அவச்யம் கற்கவேண்

டும். ஸம்ஸ்கிருதத்தை இறந்தபாஷையெனக் கூறும் வாதியின் அபிப்ராயத்தைச் சிறிதாராய்வோம். முன்காலத்தில் இப்பாஷை எங்கும் பரவியிருந்தது. பண்டிதர்முதல் பாமரர்வரையில் இப் பாஷைகொண்டு லோகவ்யவஹாரத்தை நடத்திவந்தனர். பிறகு காலத்தின் மாறுதலால் வியவஹாரத்தைவிட்டு கிரந்தங்களில் மட் டும் இருந்துவந்தது என்பார் சிலர். சிலர் உலகநடையில் இப் பாஷை எள்ளளவுமிருந்துவந்ததில்லை. ஏனெனில் அதற்குச் சரி யான காரணங்களில்லை. கிரந்தாரூடமாகவேதானிருந்துவந்திருக்க வேண்டும்.வ்யவஹாரத்துக்கனுகுணமாக பதங்கள் விசேஷமாகக் காணப்படவில்லை. உலகசம்பந்தமான பழக்கவழக்கங்கள் ஒன் றும் காணப்படவில்லை என்று தோன்றியவாறு சில ஆராய்ச்சிக் காரர்கள் ஐயமின்றி சொல்லக்கிளம்புகின்றார்கள். இவ்விதமிவர் கள் கொஞ்சம் நிதானித்து ப்ராசீனக் கிரந்தங்களைப் பரிசீலனம் செய்துபார்த்திருப்பார்களேயானால் இவ்விதம் சொல்லத் துணிந் திருக்கமுடியாது. ஆனால் உலகநடையில் இப்பொழுதில்லை என்ப தற்கு நமது உதாஸீனத்தனம்காரணமேயன்றி வேறில்லை. இதைக் காரணமாகக்கொண்டு இது இறந்தபாஷையெனச் சொல்வது மிக வும் தகாததாகும்.கிரந்தங்களை இயற்றுபவரான நமது பெரியோர் கள் உலகில் செய்யவேண்டிய கர்மங்களை விதிவழுவாது செய்ய வேண்டியும் தகாத கர்மங்களை விலக்கவேண்டுவதை அறிவிக்க வேண்டி இயற்றியிருக்கின்றனர். அப்படி இயற்றியவர் எல்லா ஜனங்களும் இதையுணர்ந்து பயனடையவேண்டுமென அவாவுள் ளவர். ஆகையால் எல்லோருக்கும் பொதுவாயுள்ள பாஷையில் தான் அவர்கள் எழுதியிருக்கவேண்டும். அவர்களோ இந்த ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதியிருக்கிறபடியால் இது எல்லோருக் கும் பொதுபாஷையாகவும் உலகப்பழக்கவழக்கங்கள் யாவும் இப் பாஷையினால் செய்யப்பட்டுவந்ததென்பதில் யாது சந்தேகம்? ரூபகம் (நாடகம்) முதலியவைகளின் பிரயோஜனமும் செய்ய வேண்டியதையும் விலக்கவேண்டியதையும் உபதேசமூலமாய் அறிவிப்பதே. அதுவும் ஸம்ஸ்கிருதமயமாயல்லவா இருக்கிறது. இவைகளினாலும் உலகநடை பெற்றது ஸ்பஷ்டமல்லவா? பின் னும் ஸூக்ஷ்மதர்சியாகப் பார்த்தால் ப்ராசீனகிரந்தஜாதங்களை நன்கு பரிசீலனை செய்தால் உலகநடைபெற்ற பாஷை எது எங்கு குறிப்பிடப்படுகிறதோ அப்பாஷையில் யாது விசேஷங்களை அவர்

கள் காண்கின்றனவோ அவை யாவும் நமது பாஷையில் இல்லாமலில்லை. இவ்வளவையும் கவனிக்குமளவில் நமது பாஷை உலக நடையற்றது என்பாரானால் அதைக்காட்டிலும் ஸாஹஸமானது ஒன்றுமில்லை. இவ்வுலகிலும் மறுவுலகிலும் ரொம்பவும்முக்யமான விஷயங்கள் யாவையுண்டோ அவை யாவும் நமது பெரியோர்களான மகரிஷிகளாலும் மகாகவிகளாலும் நமது பாஷையில் நன்கு சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வரிய விஷயங்கள் எப்பாஷையிலுமில்லை. சுருக்கச்சொல்லுங்கால் எந்த விஷயங்கள் இப்பாஷையிலில்லையோ அது எங்குமில்லையென்பதாம். எவர்கள் நமது முன்னோர்களான பூர்வாசார்யர்களின் பிரதிபாவிசேஷங்களையும் நடத்திவந்த ராஜ்யநிர்வாகம் முதலிய கார்யங்களையும் கவனிக்கவேண்டினால் ஸம்ஸ்கிருதமயமான கிரந்தங்களை நன்கு பரிசீலனை செய்துபார்க்கவேண்டும். அப்பொழுது அக்காலத்திலுள்ள பழக்கவழக்கங்கள் நன்கு அறியப்படும். உலகில் நமக்கு யாது ஆச்சர்யமான வஸ்துக்கள் காணப்படுகின்றனவோ அவைகள் முன்காலத்திலில்லாமலில்லை, இப்பொழுது காணப்படுகின்றன. வ்யோமயானங்கள் (ஆகாசவிமானம்) குறிப்பிட்ட தூரமே செல்கின்றன. முன்காலத்திலுள்ளவைகள் அளவிடமுடியாத தூரங்கள் சென்றுவந்தனவென்பது ராமாயணபாரதாதிகளிலிருந்து நமக்கு விளங்கவில்லையா?

“ஜலத்தில் ஜோதிஸ் நின்றது” என்றபொருளை போதிக்கும் சுருதி:— வித்யுத் ஸம்பந்தமான முறைகளை அவர்கள் அறிந்திருந்தனரென்பதை நன்கு விளக்கவில்லையா? ராஜ்யதந்திர விஷயத்திலும் அவர்களுக்கிருந்த திறமை மனுமுதலிய நீதிசாஸ்திரங்களிலிருந்து நன்கு புலப்படுகின்றது, இப்பொழுதும் அதை ஒட்டியே சட்டங்கள் நின்று வருகின்றனவென்பதை யாவரும் மறுக்க இயலாது. சாணக்ய அர்த்தசாஸ்திரம் எவருக்குத்தான் ஆச்சர்யத்தை உண்டுபண்ணாது. ஸ்தாவரதத்வ ஆராய்ச்சி நிபுணர் ஜெ. ஸி. போஸும், தனக்காதாரங்களாக ப்ராசீன கிரந்தங்களையே கையாண்டு வருகின்றனர்.

பயிர்கள் பச்சிலைகளின் குணதோஷங்களைக் கவனிப்பது முதலியவைகளில் ஆர்யர்களுக்கிருந்த புத்தி நுட்பம் ஆயுர்வேதத்தில் நன்கு காணலாம். வியாபாரம் ஸமுத்ரயானம் முதலியவைகளைப்பற்றியும் அறிய பல கிரந்தங்களுண்டு. கணிதத்திலும்,

நட்சத்திரகதிபேதங்கள் இவைகளிலிருந்த ஆழ்ந்த எண்ணங்கள் ஜ்யோதிச் சாஸ்திரங்களால் விளக்கும். இன்னுமரிதான பல விஷயங்கள் அவர்களின் மனதிலுதிக்காமலில்லை. இவைகளை கவனித்த எவர்தான் இவைகளை மறக்கமுடியும்? ஆத்ம ஸம்பந்தமான விஷயங்கள் இப்பாஷையில் எவ்வளவு மிகுதியோ அவ்வளவு வேறு பாஷைகளிலில்லை என்று மேனாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். உண்மையறிய சிலர் இந்நாட்டையடைந்து படிக்கமுயலுகின்றனர். பாஷை உயர்வுக்குக் காரணம் "ஸாஹித்யம்" இதையும் ஆராய்ந்தால் இதற்கு நிகராக வேறில்லை. இருக்கப்போவதுமில்லை என்பதை ஒப்புக்கொள்வார்கள். இப்பாதகண்டத்திற்கு ஸம்ஸ்கிருத பாஷையை விலையுயர்ந்த ரத்னமென கொண்டாடுகின்றனர். ஆகையால்

संस्कृतं नाम देवी वागन्वाख्याता महर्षिभिः ।

என்று போற்றப்படுகின்றது.

இம்மஹிமைபெற்ற இப்பாஷை வியாஸர் முதலிய மஹா முனிவர்களாலும் கவிதிலகரான காளிதாஸர் முதலிய மஹாகவிகளாலும் ஆதரித்து போஷிக்கப்பட்டு வந்தன. அவ்வமயம் பாலர்கள் முதல் யாவராலும் பேசப்பட்டுவந்தன. பண்டிதர் முதல்பாமரர்வரையில் ஒரேபாஷையில்பேசிக்கொண்டுவந்திருப்பார்களானால் அப்பாஷைக்கு ஒருபெரியமாறுதல்ஏற்பட்டிருக்கவேண்டும். அம்மாறுதல் அக்காலத்திலிருந்ததென்பதற்கு பிராகிருத प्राकृत பாஷை ஒரு சான்றாகும். ஆகையால் பிருகிருதியிலிருந்து உண்டானவை "ப்ராகிருதம்" என்ற வ்யவஹாரமும் ஒத்துவரும். ஆகையால் ஐஹிகாமுஷ்மிக பல ஸாதனமான இப்பாஷை அப்பொழுது எங்கும் உலகவழக்கில் நிறம்பிவந்ததென்பது விளங்கும். இம்மஹிமைவாய்ந்த இப்பாஷை வ்யவஹாரத்திலிருந்து நழுவிவிட்டது. அவைக்குப் பலகாரணங்கள் உண்டு. அரசர்கள் நன்கு பரிபாலிக்கிறதில்லை. அவரையண்டியவர்கள் பரிஹஸிக்கின்றனர். இவர்களை அக்ஞர்களென்றும் அல்பபுத்திவாய்ந்தவர்களென்றும்பலவாறாக சொல்லக்கிளம்புகின்றனர். பாவம்! பாவம்!!

நமது தேசபாஷையாகிய இவ்வடமொழி இவ்வளவு ஹீன ஸ்திதிக்கு வந்ததின்காரணம் நாமேதவிர வேறில்லை. நம்மவரில் ஒருவர் சிரமப்பட்டு ஒரு விஷயத்தைக் கண்டுபிடிப்பாரானால்

அதைப்பிரகாசப்படுத்த அவர் முன்வருவதில்லை. அவரின் மன தில் மட்டும் விளங்கி அவருடன்கூட அவ்விஷயமும் நசித்து விடுகிறது. ஆகவே மேகத்தின் நடுவில் அடங்கிய நிலாவைப் போல் இன்னவர் சக்தி குன்றிவிடுகிறது. ஆகையால் ஆபத்துக் குக்காரணமான குருகிய புத்தியைவிட்டு போஷித்துவருவார்களே யானுல் சீக்ரத்தில் வசீகரமான ஓர் தசை இப்பாஷைக்கு கட்டா யம் உண்டாகாமல் போகா. ஸம்ஸ்கிருதாபிமானிகள் பெரும் முயற்சியால் சென்ற சக்தியையும் மஹிமையையும் மறுபடி அடையமுடியும். நம்மவர்கள் இதற்குவேண்டிய பெரும் முயற்சியைச்செய்யவேண்டும். தற்கால உலகநிலைமை வேதத்தை ஆதரிப்பதிலும், ரக்ஷிப்பதிலும், போஷிப்பதிலும் மிகுதியாகவே பின்சென்று வருகிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்கதாகும், அதுவுமன்னியில் அவர்களுக்கு அதிருப்தியையும் உண்டுபண்ணி வைக்கின்றது. இவ்விதமெனில் இவர்களைப் பார்க்கும் மற்ற வருக்கு எப்படி அதில் விருப்பமுண்டாகும். இதனுல் ஸம்ஸ்கிரு தாபிமானிகள் வெகுவாக பீடிக்கப்படுகிறுர்கள், இப்பாஷை முன்னேற்றமடைய விரும்பி இவர்கள் ஒன்றுசேர்ந்து இதற்கு ஒரு சபைக்கூட்டி அதில் தலைமைவகித்து நீங்கள் (ஸம்ஸ்கிருதாபி மானிகள்) ஸம்ஸ்கிருதாப்பியாஸம்செய்து ஆத்மவிசாரம் செய்ய வேண்டும். அதினின்று சாச்வதமான பேரானந்தம் அடைய வேண்டும். அதுவே பிறவிப்பயனுகும். மற்றவர்களைப்போல் பணப்பேராசை அடையலாகாது. நீங்கள் பெரியோர்களான மகாமுனிவர்கள் சென்றவழியைப் பின்பற்றவேண்டுமென உபதேசிக்கவேண்டும்.

(தொடரும்) K.R. வைத்தினுதசாஸ்திரி.

ஓர் உபந்யாஸம்,

இப்பவும் சென்ற 2-3-31 திங்கட்கிழமை காலை 8-மணிக்கு கும்பகோணம் ராஜா ஸம்ஸ்கிருத கல்லூரியில் ப்ரம்மஸ்ரீ பாஷ்ய பாவக்ஞஸ்மிருதிபூஷ்ணுதி பிருதாங்கிதரும், 'ஜ்யோதிஷசந்திரிகை, ஆரியதர்மம் இவைகளின் பத்திராதிபரும், கீழ்நாட்டுக்கலாகணித பரீக்ஷகரும், பலசிறந்த நூல்களை வெளியிட்டிருப்பவரும், ஸ்ரீ சங்

கராசார்யஸ்வாமிகள் மடம் ஆஸ்தான வித்துவானுமாகிய V. S. வெங்கடராம சாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் பிர்மஸ்ரீ M. K. வெங்கடேச்வாய்யர் அட்வகேட் அவர்களால் 'வேதங்கள்' என்னும் விஷயம் மிகவும் அழகாக உபன்யசிக்கப்பட்டது. முடிவில் அக்கிராஸனரதுஉபந்யாஸத்திற்குப் பிறகு வந்தனோபசாரங்களுடன்மீட்டிங்கு பூர்த்திபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

N. K. வெங்கட்டராமசாஸ்திரி.

வார விருத்தாந்தம்.

விசாலபுத்திவேண்டும்:-கடினமான ஓர் விஷயத்தை ஆராய்ந்துபகுத்தறிய நமக்கு விசாலபுத்திவேண்டும். தனக்கெட்டாத விஷயத்தில் அதைக் குறைகூறுவோர் மந்தர். சென்றவாரம் நெல்லிக்குப்பத்தில் கூடிய சீர்திருத்த சபையில் தெய்வமில்லை யென்றும் படிப்பு பணம் இவைகளை ஸரஸ்வதி லக்ஷ்மீ எனக்கொண்டாடுவது மூடத்தனமென்றும் ஒருவர் பேசினார். ஷை சபையில் இதைப் போன்ற மொழிகளைத் தவிர நாம் வேறெதை எதிர்பார்க்க முடியும்? எங்கும் நிறைந்த, அவர்களே கூறும் ஓர் சக்தி அங்குமாத்திரம் இல்லாது போமோ? என்றுகூட நாம் அவர்களைக் கேட்கவேண்டாம். புத்தகம் ஸரஸ்வதீ வடிவம் எனபோதித்து வரும் போதே, நமது குழந்தைகள் அவைகளை அலக்ஷ்யமாக எரிவதும் நாளைக் கொன்று கிழிப்பதுமாக ஓர் வகுப்பிலிருந்து மேல் வகுப்பு போவதற்குள்ளாக நாலுபுஸ்தகம் வாங்கும்படி செய்கின்றனர். பூர்ணப் படிப்பாவதற்குள் எத்தனை புத்தகம் செலவழிக்கின்றனர்? தந்தைக்கு அவ்வளவு சிலவாவதை குறைக்கவேனும் புத்தகத்தில் தைவபுத்தி வைக்கலாகாதா? நமக்குத் தெரியாவிடினும் பாரதநாட்டு ஸம்பரதாயத்தில் விசேஷப் பொருளுண்டென்றறிந்து அநுஷ்டியுங்கள் என மேனாட்டவரான ஸர்ஜான் உட்ராவ் சொன்னதையேனுங் கவனிப்பரோ?

** ** ** ** ** ** **

இது அனுஷ்டானகாலம். நமது ஸதாசாரங்களைக் கைவிட்டதால் தான் நமது ஸமூஹம் பலபல துக்கத்திற்குப் பாத்திரமான தென்பதை பலர் பலஸபைகளில் பேசியாய்விட்டது. பல பேசுவதைவிட சில அநுஷ்டிப்பது உசிதமன்றோ? சென்றவாரம் திருக்கோவிலூரில் நடந்த பிராமண ஸபை அருமையான பலதீர்மானங்களைச் செய்தது. பல பெரியார் அழகாகப் பேசினர். இச்சபையாரும் எனையோரும் இத்தீர்மானங்களை

அநுஷ்டானத்திற்கு கொண்டுவரும் காலமிது, சென்ற ஆண்டுமுதல் பல உத்யோகம் செய்யும் பெரியோர்கள் அத்யயநம் செய்து வருவதைக் கேட்க ஆஸ்திகர் மனம் குளிரும், மற்ற தீர்மானங்களையும் அநுஷ்டிக்க பிரார்த்திக்கிறோம்.

** ** ** ** ** ** **

மகாத்மாவாகும் வழி. தேசீயத் துறையில் ஒப்பற்ற தியாகம்செய்து கபடமற்று ராஜீய விஷயத்தில் ராஜிசெய்ய டில்லியிலுள்ள ஸ்ரீ யுத காந்தி 26உ ஓர் உபன்யாஸம் செய்தார். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை தீண்டாமை யகற்றல் ராட்டினம் இவைகளால்தான் தான் மஹாத்மாவான தாகவும் இதை அநுஷ்டித்தால் எல்லோரும் மஹாத்மா வாகலாம் எனவும் உபதேசித்தார். தனது மஹாத்மத் தன்மையில் உண்மையாக மதிப்பு வைத்துப்பேசியிருந்தால் அதற்குத் தீண்டாமையையகற்ற முயற்சிப்பதே காரணமெனக்கருதியிருந்தால் இதைவிட அசட்டுத்தன்மை வேறிராது. தீண்டாமை விஷயத்தைக் கிளப்பிவிட்டதால் பற்பல துன்பங்கள் நேருகின்றன. "ஸநாதனிஸ்ட்"என்றஹிந்திப் பத்திரிகையின்ஆசிரியர் தன்னைக் கொன்று விடுவதாக காந்தி சிஷ்யரிடமிருந்து கடிதம் வந்ததை நமக்குக் காண்பித்தார். பழையபடி இவர் வேறு எந்த ஆத்மாவாக வாவது இருப்பதேமேல்.

** ** ** ** ** ** **

நல்ல தூதர்,-தற்சமயம் அரசாங்கத்திற்கும் காங்கிரஸுக்கும் ராஜி செய்ய சில தூதர் தோன்றியிருக்கின்றனர். இவர்களனைவரும்சீர்திருத்தக் காரரே. சாப்ரு என்பவரிதில் ஒருவர். இவர் இந்திய சட்டசபை நிர்வாக அங்கத்தினராயிருந்தவர். அவர்தான் சீமையில் ஸர்வகக்ஷிமகாநாட்டில் ஸாதித்ததைப்பற்றி டில்லியில் பேசினார். மதவிஷயமான கக்ஷிகளைக் கொண்டு தான் ஸாதித்ததைக் கெடுத்துவிடக் கூடாதென வருந்துகிறார். ஸாதித்ததென்ன ? அது யாரால் ? என்பது வேறு. மத விஷயத்தை மறந்து இவர்கள் சொல்லும் அன்னியாசாரத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்பது இவர்மதம். சாரதாசட்டத்தை மீறுபவரை சவுக்கால் அடிக்க வேண்டுமெனக்கூறிய பெரியாரிவர்: இவர் போன்ற தலைவர்கள் அல்லது தூதர்களால் நாட்டிற்கு நலமுண்டோ?

** ** ** ** ** ** **

முன்னேற்றமா பின்னேட்டமா:-சென்னை வில்லிங்க்டன் ஹாலில் வித்யுச்சக்தி இலாகாத் தலைவர் ஓர் உபன்யாஸம் செய்தார். இதால் ஸன்மார்க்க விருத்தியில்லை என இந்தியர் சொல்வதை ஒப்புக்கொண்டு ஆனாலும் பற்பல போகங்களை இதைக்கொண்டு அநுபவிக்கலாமென அவரும் தேசியபத்திரிகைகளும் சந்தோஷிக்கின்றன. ஆத்யாத்ம விஷயத்தில் அணுவளவேனும் வித்தியுச் சக்தியோ அதனாலுண்டாகும் போகங்களோ பயன்படாதென நாம் சொல்லாமலே ஒப்பு முடிந்தவிஷயம்;

கை வேலைசெய்து பிழைக்கும் ஏழைவயிற்றில் மண்ணைப்போட இவைகள் கிளம்பின. ஆதலால் பல்லாயிரக்கணக்கானவர் வேலையில்லாமல்திண்டாடி அரசாங்கத்திற்குத்துன்பத்தை விளைவிக்கின்றனர். கொள்ளுக்கு வாயைத் திறந்தால் கடுவாளத்திற்கும் திறக்கத்தான் நேரும்.

** ** ** ** ** ** **

மடியில் விட்டால் கோட்டாதோ:- 26உ பெங்களூர் ஹிந்துப் பெண்களை, பெண் பள்ளிக்கூட கிருஸ்தவ உபாத்தியாயினிகள் பைபிலில் சிலவாக்யங்களை அட்டையில் எழுதி விவாகமான அப்பெண்கள் தலையில் அதை மாட்டி ஞாயிறன்று சர்ச்சுக்கு அழைத்துச் சென்று கிருஸ்தவப் பிள்ளைகளைக்கொண்டு மாலையிடச் சொன்னதாகவும் இதையறிந்த பெற்றோர் குழந்தைகளை அனுப்பும்படி கேட்க அவர்களை அவமதித்ததாகவும் இதை விசாரிக்கவேண்டுமென 500 கனவான்கள் கை எழுத்திட்டு அரசாங்கத்தை வேண்டி யிருக்கின்றனர். மற்றும் பல அக்ரமங்கள் கிருஸ்தவப்பெண்மக்கள் கலாசாலையில் நடக்கின்றன: அந்தக் கலாசாலைக்கு குழந்தைகளை அனுப்பிப்பின்னற் கஷ்டப்படுவது தேளை மடியில்வைத்துக் கொண்டு கொட்டுகிறதே என்பதுபோலாம். இனியேனும் பெண்ணுடைய பெற்றோர் ஜாக்கிரதையா யிருப்பாரா ?

** ** ** ** ** ** **

நாம்மறந்தோம்:-காரணமின்றி பிராமணன் வேதாத்யயநம் செய்ய வேண்டுமென்பது சாஸ்திரம். 21உ திருச்சியில் நடந்தசைவஸபையில் ஓர் முதலியார் ,சைவ நூல்களை சைவரனைவரும் வேதம்போல் கேள்விமூலம் மனப்பாடம் செய்யவேண்டுமென வற்புறுத்தினர். அனுஷ்டானத்திலும் வரும் அது. நம்மவரோ ஆங்கிலவேதத்திலே அன்பைச் செலுத்திமறையை மறந்தனர்.

** ** ** ** ** ** **

பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏறென்றால் ஏறத்தான் வேண்டும். கொச்சியில் உபாத்திமைத் தொழிலில் அமர்ந்த பெண்மக்களை ஜனக்கணக்கில் வீடு வீடாகச்சென்று ஆண்மக்களை வயது ஜாதிமதம் படிப்பு உத்யோகம் ஸந்ததி முதலியவைகளை விசாரிக்கும் வேலையை செய்யும்படி அதிகாரிகள் உத்திரவிட்டார்களாம் இதை ஆக்ஷேபித்து அவசியம்நேர்ந்தால்வேலையையும்விட பெண்கள் ஸித்தமாயிருக்கிறார்களாம் அதிகாரிகள் செயலைக் கண்டிப்பதோடு ஸ்திரீகள் தைர்யத்திற்கு சந்தோஷப்படுகிறோம். ஆனால் பெண்கள் ஸ்வதர்மத்தைவிட்டு உத்யோகத்திற்கோ தாலூக்காபோர்ட் கௌரவஸ்தானத்திற்கோ வந்தால் முன்சொன்ன பழமொழிபோல் தான்நடக்கும்.

ஸ்ரீவத்ஸ வே சோமதேவ சர்மா.